நல்லூர் கிளை நூலகம்
மாநகர [illegible] மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | சித்திரை 21 | [04-05-93] | செவ்வாய்க்கிழமை | ஓசை 75

## பாலர் வகுப்பு மாணவருக்கு கதிரை மட்டும் விநியோகம்

வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளில் தளபாடமின்றி தரையிலிருந்து கல்வி கற்கும் மூவாயிரம் மாணவர்களுக்கு மிகக் குறைந்தளவு தளபாடங்களே வழங்கப்பட்டுள்ளன. கப்பலில் வந்தவற்றில் அறுபது பாலர் வகுப்பு மேசைகளும், இருநூற்றி நாற்பது பாலர் வகுப்பு கதிரைகளும் மட்டுமே எட்டுபாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றிலும் இரண்டு பாடசாலைகளுக்கு தலா 30 கதிரைகள் மட்டும் மேசைகளில்லாது வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை அப் பகுதியிலுள்ள ஆறு பாடசாலைகளுக்கு தளபாட பற்றாக்குறை காணப்பட்டபோதிலும் எவ்வித தளபாடங்களும் வழங்கப்படாததையிட்டு பெற்றோர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். உயர்வகுப்பு மாணவர்களுக்கான கதிரை மேசைகளுக்கும் இப் பகுதி பாடசாலைகளில் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. (36)

# கொழும்பில் பாரிய தேடுதல் வேட்டை; தாக்குதல் தொடரலாம் என அச்சம்

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை புதன்கிழமை அன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனை செலுத்தமுடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## தற்கொலைப் படைவீரர் பிரேமா வீட்டருகே வசித்தார்

பிரேமதாசாவின் கொலைக்கு காரணமான தற்கொலைப் படைவீரரை அடையாளம் கண்டுவிட்டதாக சிறிலங்கா பொலிசார் நேற்று தெரிவித்தனர். எனினும் அவரின் பெயர் விபரங்களை கூற அவர்கள் மறுத்துவிட்டனர்.

இவர் பிரேமதாசாவின் வீட்டினருகிலேயே கடந்த இரண்டு ஆண்டுகளாக தங்கியிருந்ததாக அவர் தங்கியிருந்த விடுதியின் உரிமையாளர் பொலிசாருக்கு தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்பினால் துண்டிக்கப்பட்ட தற்கொலைப் படைவீரனின் தலையை நேற்றுமுன்தினம் ரூபவாஹினி காட்டியதையடுத்தே அந்த விடுதி உரிமையாளர் கொலையாளியை அடையாளம் கண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ்வீட்டின் உரிமையாளரும் வேலையாளும் கைது செய்யப்பட்டதாக வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

## தற்கொலைப்படை வீரரை அடையாளம் காண சிரமம்

(கொழும்பு)

பிரேமதாசா கொல்லப்படக் காரணமான குண்டு வெடிப்பில் தற்கொலைப் படை வீரரும் உடல் சிதறிப் பலியானதால் அவரை அடையாளம் காண்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார். கொலையாளியின் முகடும் இச் சம்பவத்தில் உருக்குலைந்துவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தற்கொலைப் படைவீரர் தமிழராகவே இருக்கவேண்டும் எனக் கருதும் பொலிஸார், கொலையாளியை அடையாளம்காண அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் தமிழ்க் குழுக்களின் உதவியை நாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி கொலையிலும்

## தலைநகரில் தற்கொலைப்படை செயற்படுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் தலைநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, பாரிய தேடுதல் வேட்டையும் இடம்பெற்று வருகின்றது. விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை தலைநகருக்குள் ஊடுருவியிருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்துள்ள தகவல்களைத் தொடர்ந்தே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இன்னும் பல தாக்குதல்கள் இடம்பெறலாமெனப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக் குறிப்பிட்டுள்ள பொலிஸ் அதிகாரி, இன்னும் சில தற்கொலைப் படையினர் கொழும்பில் தங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் இராணுவம் மற்றும் பொலிசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தலைநகருக்கு வரும் பிரதான நுழைவாயில்களில் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் என்பவற்றின் மீது இராணுவம் கடும் சோதனைகளை மேற்கொண்டுள்ள அதேவேளை தலைநகரத்திற்குள்ளேயும் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் அப்பாதுகாப்பு அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும் வடக்கு, கிழக்கில் இருந்து வரவழைக்கப்பட்ட இராணுவத்தினரின் உதவியுடன் இத்தேடுதல் வேட்டையில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொழும்பு நகரப் பகுதியில் கொமாண்டோ பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்புநகரிலும்புறநகர்ப் பகுதிகளிலும் பொலிஸ் மற்றும் இராணுவ ரோந்துகளுக்கு மேலதிகமாக கொமாண்டோ படையினரின் ரோந்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தலைநகர் யுத்தம் நடைபெறும் ஒரு பகுதி போன்று முப்படையினரின் நடமாட்டம் கொண்டதாகக் மிகக் குறைவாக இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அலுவலகங்களிலும் இதே நிலையே காணப்படுகின்றது. தனியார் பாடசாலைகள் இன்னமும் திறக்கப்படவில்லை.

## இறுதிக்கிரியை தினம் விடுமுறையாக அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவை முன்னிட்டு கடைப் பிடிக்கப்படும் தேசிய துக்க தினங்களில் தேசியக்கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடும்படியும், மதுபானக் கடைகள், இறைச்சிக் கடைகள், திரையரங்குகள் என்பனவற்றை மூடிவைக்கும் படியும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் இறுதிக்கிரியைகள் நடைபெறும் வியாழக்கிழமையை அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறை தினமாகவும் பொது நிர்வாக மாகாணசபைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இறுதி ஊர்வலம் ஜனாதிபதி மாளிகையிலிருந்து வியாழக்கிழமை முற்பகல் பதினொரு மணிக்கு ஆரம்பமாகும். இவ் இறுதி ஊர்வலம் டி. பி. ஜயதிலக்க மாவத்தை, யோர்க்வீதி, லோவர் சட்டர் வீதி, ஒல்கொட் மாவத்தை, சங்கராஜ மாவத்தை, பஞ்சிகாவத்தை வீதி, மருதானைச் சந்தி, மருதானை வீதி, கெயின் வீதி, அலெக்சாண்டிறா பிளேஸ், ரொறிங்டன் சதுக்கம் வழியாக சுதந்திர சதுக்கத்தை சென்ற

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## பொருளாதார கொள்கை; மாற்றம் எதுவும் இல்லை

### பதில் ஜனாதிபதி தெரிவிப்பு

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவினால் கடைப்பிடிக்கப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கை மாற்றம் ஏதுமின்றி கடைப்பிடிக்கப்படும் என பதில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க நேற்று அறிவித்தார். பிரேமதாசாவினால் அமுலாக்கப்பட்டுவந்த வீடமைப்புத்திட்டமும் தொடரும் என்றும் விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

# புதிய ஜனாதிபதியாக விஜயதுங்கா

இவர் பிரேமதாசாவின் வீட்டினருகிலேயே கடந்த இரண்டு ஆண்டுகளாக தங்கியிருந்த தாக அவர் தங்கியிருந்த விடுதியின் உரிமையாளர் பொலிசாருக்கு தெரிவித்துள்ளார்.

...படுகின்றது.

இதேவேளை இவ்வீட்டின் உரிமையாளரும் வேலையாளும் கைது செய்யப்பட்டதாக வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

## தற்கொலைப்படை வீரரை அடையாளம் காண சிரமம்

(கொழும்பு)

பிரேமதாசா கொல்லப் படக் காரணமான குண்டு வெடிப்பில் தற்கொலைப் படை வீரரும் உடல் சிதறிப் பலியானதால் அவரை அடையாளம் காண்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார். கொலையாளியின் முகமும் இச் சம்பவத்தில் உருக்குலைந்து விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தற்கொலைப் படை வீரர் தமிழராகவே இருக்கவேண்டும் எனக் கருதும் பொலிஸார், கொலையாளியை அடையாளம்காண அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் தமிழ்க் குழுக்களின் உதவியை நாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி கொலையிலும் ஸ்கொட்லன்ட்யார்ட்

(கொழும்பு)

ஜனாதிபதியின் கொலை தொடர்பாக 'ஸ்கொட்லன்ட் யார்ட்'' பொலிசாரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படும் எனச் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லலித் அத்துலத்முதலியின் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ''ஸ்கொட்லன்ட்யார்ட்'' குழுவினர் இங்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்தடி தூரத்தில் வைத்து வெடிகுண்டுத் தாக்குதல்

(கொழும்பு)

ஜனாதிபதியைக் கொலை செய்த தற்கொலைப் படைக் கொலையாளி ஜனாதிபதி நின்ற இடத்தில் இருந்து ஐந்தடி தூரத்தில் வைத்து வெடி பொருள்களை வெடிக்கவைத்தார் என லயனல் குணதிலக்க தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு மிக அருகே அவர் செல்லமுற்பட்டபோது கொமாண்டோ பொலிசார் அவரைத் தடுத்து நிறுத்த முற்பட்டார் என்றும், அவ்வேளை ஜனாதிபதி ஒருசில அடிகள் முன்னால் வந்தார் என்றும், அப்போது கொலையாளி தன்னிடம் இருந்த குண்டை வெடிக்கவைத்தார் என்றும் தெரிவித்தார்.

## பிரேமா கொலை விவகாரம்; கொழும்பில் பலர் கைது

பிரேமதாசா, அத்துலத் முதலி கொலை தொடர்பாக பலர் இதுவரை கொழும்புப் பகுதியில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் கூறினர்.

### பிரேமா, லலித் கொலைகள்

## புலிகள் செய்தார்கள் என சிங்களவர் நம்பவில்லை

பிரேமதாஸ, லலித் அத்துலத்முதலி ஆகியோர்களின் கொலைகளில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டுள்ளதாகப் பொலிசார் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றபோதிலும் சிங்கள மக்களில் பெரும்பாலானோர் அதை ஏற்கவில்லை என ராய்ட்டர் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கொலைகளில் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கமுடியாது. இவர்கள் இருவரினதும் அரசியல் எதிரிகளே இக்கொலைகளை நடத்தியிருக்கலாம் என்றே அவர்கள் கருதுவதாக அவர் மேலும் குறிபபிட்டுள்ளார்.

## கொழும்பு நகரம் வழமைக்குத் திரும்பியது

கொழும்பில் நேற்று அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், போக்குவரத்து சேவைகள் வழமை போல் நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்க திணைக்களம், பாடசாலைகளில் மட்டுமே சற்று குறைவானவர்கள் கடமைக்கு வந்ததாகவும் தெரிய வருகின்றது.

கொழும்புச் சந்தையில் வழமையான வியாபாரம் நடைபெற்றதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

...அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இன்னும் பல தாக்குதல்கள் இடம்பெறலாமெனப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக் குறிப்பிட்டுள்ள பொலிஸ் அதிகாரி, இன்னும் சில தற்கொலைப் படையினர் கொழும்பில் தங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கொழும்பில் இராணுவம் மற்றும் பொலிசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தலைநகருக்கு வரும் பிரதான நுழைவாயில்களில் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் என்பவற்றின் மீது இராணுவம் கடும் சோதனைகளை மேற்கொண்டுள்ள அதேவேளை தலைநகரத்திற்குள்ளேயும் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் அப்பாதுகாப்பு அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும் வடக்கு, கிழக்கில் இருந்து வரவழைக்கப்பட்ட இராணுவத்தினரின் உதவியுடன் இத்தேடுதல் வேட்டையில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொழும்பு நகரப் பகுதியில் கொமாண்டோ பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்புநகரிலும்புறநகர்ப் பகுதிகளிலும் பொலிஸ் மற்றும் இராணுவ ரோந்துகளுக்கு மேலதிகமாக கொமாண்டோ படையினரின் ரோந்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தலைநகர் யுத்தம் நடைபெறும் ஒருபகுதி போன்று முப்படையினரின் நடமாட்டம் கொண்டதாகக் காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் காலப்பகுதியில் கொழும்பில் வன்முறை வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதனாலேயே இவ்வாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதனிடையே நேற்று கொழும்பில் அரசாங்கப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக திறக்கப்பட்டபோதிலும் மாணவர்கள் வரவு மிகக் குறைவாக இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அலுவலகங்களிலும் இதே நிலையே காணப்படுகின்றது. தனியார் பாடசாலைகள் இன்னமும் திறக்கப்படவில்லை.

## தமிழர் மத்தியில் கொழும்பில் பதற்றம்

பத்து ஆண்டுகளுக்கு முன் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெற்ற இனக்கலகம் குறித்த ஓர் அச்சநிலைகொழும்பில் தமிழ் வட்டாரங்களில் நிலவுவதாக பி. பி. ஸியின் முன்னாள் கொழும்புச் செய்தியாளர் ஹம்ப்ரிஹொக்ஸ்லிதெரிவித்துள்ளார். எனினும் சகல பாதுகாப்பு ஒழுங்குகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தற்போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சு பொறுப்பை வகிக்கும் அமைச்சர் சிறிசேன கூரே உறுதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் பிரேமதாசா இல்லாத ஐ. தே. க. வெற்றியடையுமா அல்லது கட்சியினுள் பூசல் ஏற்பட்டு கட்சி சீர்குலையுமா என்பதை தேர்தல் முடிவுகளே தீர்மானிக்கும் என்றும் ஹம்ப்ரி ஹொக்ஸ்லி மேலும் தெரிவித்தார்.

## பிரதமராக ரணில்; கூரேக்கு பாதுகாப்பு

சிறிலங்காவின் பிரதமராக ரணில்விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். சிறிலங்காவின் பதில் ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க பதவியேற்றதைத் தொடர்ந்து இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக சிறிசேன கூரே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பி.பி.ஸி.தெரிவித்தது.

## இடைக்கால அரசு அமைதி வரும் வரையே

### காமினி வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஒன்று நடைபெறும் வரை இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி விரும்பியதே ஒழிய ஐக்கிய தேசியக் கட்சி விரும்புவது போல பதவிக்காலம் முடியும்வரை அல்ல என காமினிதிசநாயக்கா தெரி

[3 ஆம் பக்கம் பார்க்க]

---

...கும் படியும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் இறுதிக்கிரியைகள் நடைபெறும் வியாழக்கிழமையை அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறை தினமாகவும் பொது நிர்வாக...

...மாவத்தை, ...காவத்தை வீதி, மருதானைச் சந்தி, மருதானை வீதி, கெயின் வீதி, அலெக்சாண்டிறா பிளேஸ், ரொறிங்டன் சதுக்கம் வழியாக சுதந்திர சதுக்கத்தை சென்ற

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## பொருளாதார கொள்கை; மாற்றம் எதுவும் இல்லை

### பதில் ஜனாதிபதி தெரிவிப்பு

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவினால் கடைப்பிடிக்கப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கை மாற்றம் ஏதுமின்றி கடைப்பிடிக்கப்படும் என பதில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க நேற்று அறிவித்தார். பிரேமதாசாவினால் அமுலாக்கப்பட்டுவந்த வீடமைப்புத்திட்டமும் தொடரும் என்றும் விஜேதுங்க தெரிவித்துளளார்.

# புதிய ஜனாதிபதியாக விஜயதுங்கா போட்டியின்றித் தெரிவாகலாம்?

## பாராளுமன்றம் இன்று கூடுகின்றது

[கொழும்பு]

சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்கா தெரிவு செய்யப்படுவது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இத்தெரிவு குறித்து இன்று நடைபெறவுள்ள பாராளுமன்றக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ. தே. கட்சியின் சார்பில் ஏகமனதாகத் திரு. டி. பி. விஜயதுங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளதினால், பெரும்பான்மை ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிகளைக் கொண்ட பாராளுமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை. எதிர்க்கட்சியின் மத்தியில் இது குறித்து நிலவும் குழப்பமான நிலை காரணமாக பெரும்பாலும் போட்டி இன்றியே திரு. விஜயதுங்கா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இதனால் திரு. விஜயதுங்கா ஏகமனதாகவே போட்டியின்றித் தெரிவாகக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதி பதவிக்கு போட்டி; குழப்பத்தில் சுதந்திரக்கட்சி

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவதில் எதிர்க்கட்சிகளின் நிலை குறித்து முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் கிடைத்துள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது வேட்பாளராக சிறிமாவோபண்டாரநாயக்காவை நியமித்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள அதிருப்தியாளர்களின் ஆதரவைத் திரட்டுவதன் மூலம் வெற்றி பெற சிறிலங்கா சுதந்திரக் கட்சி முயன்று வருவதாகவும் முன்னர் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறையை தாம் வன்மையாக எதிர்ப்பதாகவும் இவ்வாறு பலவீனமான முறையில் தெரிவாகும் ஆட்சியைத் தாம் நிராகரிப்பதாகவும் சிறிலங்கா செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக பி. பி. ஸி, நேற்று அறிவித்தது. இம்முடிவிற்கு எதிரணிகள் ஆதரவளிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் தமது கட்சி சார்பில் எந்தவொரு

(3ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் மகனும் திரும்பினார்

[கொழும்பு]

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச நேற்று நாடு திரும்பினார். நேற்று சுசரித்த இல்லத்தில் இவர் பிரேமதாசவின் உருவப்படத்திற்கும், பிரேதப் பேழைக்கும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். கூடவே ஹேமா பிரேமதாசவும் காணப்பட்டார்.

## விஜயதுங்கா குறித்த சில தகவல்கள்

டி. பி. விஜயதுங்கா பெப்ரவரி 1922 இல் பிறத்தார்.

1942 - 1947 காலப்பகுதியில் கூட்டுறவுத் திணைக்களத்தில் ஓர் அதிகாரியாகக் கடமையாற்றினார்.

1946இல் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார். மூத்த அரசியல் வாதிகளான ஜி.ஒ.ஈ. டி சில்வா மற்றும் ஏ. ரட்ணாயக்கா ஆகியோரின் தொடர்பினால் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார்

1947-1952 வரை உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சரின் செயலராகவும், 1952-1956 வரை உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சரின் செயலாளராகவும் கடமை ஆற்றினார்.

1960இல் உடுநுவரத் தொகுதியில் போட்டியிட்டு 213 வாக்குகளால் தோல்வியுற்றார்.

1965இல் உடுநுவரத் தொகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1970இல் உடுநுவரத் தொகுதியில் போட்டியிட்டுத் தோற்று 1977இல் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமைச்சில் எரிபொருள்கள் மின்சக்தி, தபால்தந்தித்தொடர்புகள் அமைச்சராகவும் மற்றும் உணவு விவசாய அபிவிருத்தி அமைச்சராகவும் பதவிகள் வகித்தார் முன்னதாக விஜயதுங்கா தகவல் ஒலிபரப்பு அமைச்சர் பதவியையும் வகித்தார்.

[3ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தஇன பொமனேரியன் நாய்க்குட்டிகள், 45 நாட்கள் நிறைவடைந்தது பூச்சி அகற்றிய நிலையில் விற்பனைக்குண்டு முகவரி:- ஸிந்துஜா வைத்தீஸ்வரன், மானிப்பாய் ஆண்கள் பாடசாலை முன்பாக மானிப்பாய். (4805)

### கசற் றேடியோக்களா! கடிகாரமா!!

உங்கள் கடிகாரங்களையும் றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6541)

### அறிவித்தல்

சங்கப் பயிற்சி நிலையத்தில் தையல், தமிழ் தட்டச்சு பயிற்சி பெற விரும்புவோருக்கான விண்ணப்பப்படிவ முடிவுதிகதி 10-05-1993 ஆக நீடிக்கப்பட்டுள்ளது தலைவர். (சி-6559)

### இரதோற்சவம்

யாழ் வண்ணை அருள்மிகு நாச்சிமார்கோவில் வருடார்த இரதோற்சவம் இன்று காலை 7.00 மணிக்கு வசந்தமண்டப பூசையும், காலை 9.00 மணிக்கு அம்பாள் இரதத்தில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1993 மே 21ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இடைவரவு
விரிவுரையாளர்

(அ) கிறிஸ்தவ நாகரீகம்
(ஆ) கிறிஸ்தவ வரலாறு (ஐரோப்பா)

---

1993ஆம் ஆண்டு வதிவிட வேளாண்மைப் போட்டியில்

## வெற்றியீட்டியோர் விபரம்

தமிழீழ பொருண்மிய மேம்பாடுக் கழகத்தால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரத்தின் தொடர்ச்சி இது. இதன் முதலாம் பகுதி 29-04-93 இதழில் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சங்கானை வட்டம்:**

1-ம் இடம் - சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன் - அக்கிணன் வீதி, வட்டுக்கோட்டை.
2-ம் இடம் - வீரசிங்கம் குகநேசன் - தொட்டிலடி சங்கானை.
3-ம் இடம் - அந்தோனி ஆனந்தராசா - கணேஸ் வீதி, சங்கானை.

**ஆறுதல் பரிசு:**

1. வினாயகமூர்த்தி பிரசாத் - காடுவன் வீதி, சுழிபுரம் மேற்கு.
2. பூமாதேவி ஜீவரத்தினம் - வல்லை வீதி, சங்கானை
3. நாகையா ஜெகதீசன் - ஆஸ்பத்திரி முகாம், சங்கானை.
4. சந்திரசேகரம் ஞானேஸ்வரி - நாகம்மாள் கோவிலடி, சுழிபுரம் மேற்கு
5. மாணிக்கம் கணேஸ் - நிச்சாமம், சங்கானை.
6. நாராயணபிள்ளை சுசந்திரராஜா - சித்தன்கேணி
7. ஆறுமுகம் ஜெயராஜா - மூளாய் தெற்கு, சுழிபுரம்.
8. குட்டியன் கிருபன் - நிச்சாமம், சங்கானை.
9. தம்பு பத்மினி - கத்தோலிக்க தேவாலய வீதி, சங்கானை கிழக்கு.
10. சிதம்பரநாதன் குகானந்தன் - வட்டு வடக்கு, சித்தன்கேணி.

**கரவெட்டி வட்டம்:**

1-ம் இடம் - தம்பிப்பிள்ளை சரவணபவானந்தன் - மாவடி வளவு, கரணவாய் வடக்கு
2-ம் இடம் - குமாரசாமி புனிதாம்பிகை - நவிண்டில், கரணவாய் மத்தி
3-ம் இடம் - செ. நடராஜா துஸ்யந்தன் - விதானை வளவு, நெல்லியடி.

**ஆறுதல் பரிசு:**

1. சிவபுண்ணியம் மயில்வாகனம் - பத்தியவத்தை, நெல்லியடி வடக்கு.
2. முருகேசு சுந்தரலிங்கம் - கலப்பிலாவத்தை, அல்வாய் கிழக்கு.
3. பூமாதேவி சோழமுத்து - கன்பொல்லை வீதி, கரவெட்டி மத்தி.
4. கனகசபை கனகசபாபதி - இலகடி அத்தாய்.
5. கோபாலகிருஸ்ணன் சஞ்சீவன் - பொன்னன் வளவு, கரணவாய் தெற்கு.
6. வல்லிக்குட்டி சண்முகலிங்கம் - வில்வம் தோட்டம், அல்வாய் தெற்கு.
7. தங்கராசா கருணாகரன் இலகடி, அத்தாய்.
8. சிவப்பிரகாசம் பொன். சிவநேசன் – கப்பூது.
9. பாலசுப்பிரமணியன் நவநீதன் - வாரியந்தனை, கரவெட்டி மத்தி.
10. கந்தையா கணபதிப்பிள்ளை - இலக்கிய வாசா, அல்வாய்கிழக்கு.

**பருத்தித்துறை வட்டம்:**

1-ம் இடம் - ஆறுமுகம் சிவபாலகிருஸ்ணன் - மிருக வைத்தியசாலை முன்பாக, மந்திகை.
2-ம் இடம் - தங்கராசா யோகேஸ்வரி - ரவீந்திரன் வீதி, அல்வாய் வடக்கு.
3-ம் இடம் - வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை - பெரியவளவு, புலோலி வடமேற்கு.

**ஆறுதல் பரிசு:**

1. வாசுகி மாணிக்கராசா - வராத்துப்பளை, புலோலி வடகிழக்கு.
2. கனகசபை தில்லையம்பலம் ஐயனார் வீதி, பருத்தித்துறை தெற்கு.
3. முருகுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் - வியாபாரி மூலை.
4. தர்மபாலசின்னன் குருபரன் - வில்லவளை தும்பளை.
5. ஆழ்வாப்பிள்ளை மார்க்கண்டு - புலோலி வடக்கு.
6. பத்மநாதன் அருட்பிரகாசம் - சவணாய், புலோலி வடக்கு.
7. பரஞ்சோதி சற்குணநாதன் - பழவத்தை, வியாபாரிமூலை.
8. வைத்திலிங்கம் தங்கவேல் - கொம்மாந்துறை, கெருடாவில் கிழக்கு
9. போ. ராஜேஸ்வரி - மந்திகை.
10. சபாரத்தினம் கணநாதன் - கோவிலதோட்டம், அலவாய் வடக்கு,

(தொடரும்)

---

## இலங்கைத்தமிழ் அகதிகளை அதிகாரிகள் துன்புறுத்தல்

(வவுனியா)

தமிழ்நாட்டில் அரசாங்க அதிகாரிகளோ - காவல்துறையினரோ எம்மை மதிக்கிறார்களில்லை. இதனால் இலங்கை அகதிகள் தமிழ்நாட்டில் வெறுப்படைந்து காணப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாட்டில் இருந்து விமானமூலம் கொழும்பு வந்துசேர்ந்த வடபகுதி இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

கப்பல்மூலம் மீளத் தாயகம் வருவதாயின் பல விசாரணைகளைஎதிர்கொள்ளவேண்டும். இது மிகத் துன்பமானது. அதனால்தான் அங்கு உழைத்துக் கூலியாகப்பெற்ற பணத்தில் சுயமாகப் பயணிகள் விமானத்தில் ஏறிக் கொழும்பு வந்தேன் என்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்ததாகச் சொன்னார். (தி)

### அமைதி நிலவியது

[கொழும்பு]

குண்டுவெடிப்பில் ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்டதற்கு மறுநாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலும், ஏனைய நகரங்களிலும் அமைதி நிலவியதாகக் கூறப்படுகின்றது சனிக்கிழமையன்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நேற்று முன்தினம் காலையில் நீக்கப்பட்டது தெரிந்ததே.

---


# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகாமையில்)
411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# O/L DAY CLASS

**புதிய பிரிவு 2**

ஆரம்பம் : 04-05-93 செவ்வாய் மு.ப. 8.00மணி
(சி-6551)

# விண்ணா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

**95 பிரிவு**
**2 ஆரம்பமாகிவிட்டன**

[சனி, ஞாயிறு]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் | 10-11 |
| வர்த்தகம் | — திரு தேவா | 1-2 |
| கணக்கியல் | — திரு. S K. பிரபாகரன் | 12-1 |
| அளவையியல் | — திரு. விக்கி | 9-10 |
| தமிழ் | — திரு. குழந்தை | 4-5 |
| இந்து நாகரிகம்) இந்து சமயம்) | — திரு. காரை சுந்தரம்பிள்ளை | 1-2 10 11 |
| புவியியல் | — திரு. குணராஜா | 11-12 |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் | 9-10 |
| வரலாறு | — திரு. சிறீதரன் | 1-2 |

✗ 95ஆம் ஆண்டுக்கு இவ்வருடம் பிரிவு III மட்டுமே ஆரம்பமாகும்.

★ அனுமதிகளுக்கு முந்துங்கள்

(சி-6557)


---

## கரும்புலிகள் நினைவாக கடல் விளையாட்டு போட்டி

(வடமராட்சி)

கடலில் காவியம் படைத்த கடற்கரும்புலிகள் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் நினைவாக கடற்புலிகளின் கடல் விளையாட்டுப் போட்டிகள் நாளை 4 ஆம் திகதி காலை 6.00 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறையில் நடைபெறும்.

இவர்கள் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட கடற்புலிகளின் விசைப்படகுகளின் வெள்ளோட்டமும் இடம் பெறும். அன்றுஆண்களுக்கான பெண்களுக்கான நீச்சல், அஞ்சல் ஓட்டம், சுழி ஓட்டம், கட்டுமரம் வலித்தல், பந்து கடத்தல், தலையணைச் சண்டை, ஆண்கள், பெண்களுக்கான கயிறு இழுத்தல், பெண்களுக்கான சங்கீதக் கதிரை, மல்யுத்தத்துடன் இணைந்த குத்துச் சண்டை போன்ற விளையாட்டுக்கள் இடம் பெறவுள்ளன.

## பருத்தித்துறை கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்

பருத்தித்துறை கடற்பரப்பில் கடற் தொழிலில் ஈடுபட்டிருந்த நான்கு மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் பிடித்துவைத்து பலமாகத் தாக்கியதோடு, மீனவர்களது எரிபொருள்களைக் கடலில் கடற்படையினர் ஊற்றிவிட்டனர்.

கடலில் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தவாறு எதிர்ப்பட்ட கடற்படையினர் மேற்படி மீனவர்களை வளைத்துப் பிடித்து தமது படகில் ஏற்றி வைத்து கம்பாகம் கயிற்றினாலும், தடிகளினாலும் மாறி மாறித்தாக்கியசம்பவம்கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் இடம்பெற்றது.

கடற்படையினர் மீனவர்களைப் பலமாகத் தாக்கிவிட்டு கடலில் தூக்கிவீசினர் என்றும், முனையைச் சேர்ந்த மூன்று மீனவர்களும், கோவியடியைச் சேர்ந்த ஒரு மீனவரும் கடலில் நீந்திக் கரையை வந்தடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினர் கடலில் வீசியமீனவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த போதிலும் மீனவர்கள் அதிர்ஷ்டவசமாகஉயிர்பிழைத்துள்ளனர்.

கோலியடியைச் சேர்ந்த மத்தியூஸ் சிமியோன் (வயது 28) என்பவரது 20 லீற்றர் மண்ணெண்ணெயை கடற்படையினர் கடலில் ஊற்றி விட்டனர். (யோ)

## கல்விப் பணிப்பாளருக்கு மணிவிழா நடத்த ஏற்பாடு

வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக அரு பணி ஆற்றி வரும் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களின் சேவையினை போற்றும் முகமாக இணுவில் வாழ் மக்களால் மணிவிழா ஒன்று எதிர்வரும் 07-05 93 வெள்ளிக்கிழமை இணுவில் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

கலாநிதி சபா. ஜெயராஜா அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பி. ப. 4-00 மணியளவில் இணுவில் சிவகாமியம்மன் கோயிலில் இருந்து கல்விப் பணிப்பாளர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். பி. ப. 5-30 மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் மணிவிழா நிகழ்வில் சமயப்பெரியார்கள், அறிஞர்கள், கல்விமான்களின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (11)

### சித்திரபுத்திரனார் கதை

தெல்லிப்பழை அருள்மிகுஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று சித்திரபுத்திரனார் கதைபடிப்பு இடம்பெறும்.

விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளும் நடைபெறும். (24)

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-04

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். டயான்** (சின்னத்துரை தேவலிங்கம் - ஆரை

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1993 மே 21ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இடைவரவு
விரிவுரையாளர்

(அ) கிறிஸ்தவ நாகரீகம்
(ஆ) கிறிஸ்தவ வரலாறு
(ஐரோப்பா)

கொடுப்பனவு:

மணித்தியாலத்திற்கு 150/- ரூபாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு ஏற்ப பயண, உணவுப்படிகளும் வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20 - நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ தாபனக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர்/நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ரூபா 20/-க்கான காசுக் கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23x10 ச மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1993. 04. 30

(சி-6558)

---

சங்கானை கிழக்கு.

10. சிதம்பரநாதன் குகானந்தன் - வட்டு வடக்கு, சித்தன்கேணி.

### கரவெட்டி வட்டம்:

1-ம் இடம் - தம்பிப்பிள்ளை சரவணபவானந்தன் - மாவடி வளவு, கரணவாய் வடக்கு
2-ம் இடம் - குமாரசாமி புனிதாம்பிகை- நவிண்டில், கரணவாய் மத்தி
3-ம் இடம் - செ. நடராஜா துஸ்யந்தன்- விதானை வளவு, நெல்லியடி.

### ஆறுதல் பரிசு:

1. சிவபுண்ணியம் மயில்வாகனம் - பத்தியவத்தை, நெல்லியடி வடக்கு.
2. முருகேசு சுந்தரலிங்கம்-
பிரமணியம் - வியாபாரி மூலை.
4. தர்மபாலசின்னன் குருபரன் - வில்வளை தும்பளை.
5. ஆழ்வாப்பிள்ளை மார்க்கண்டு-புலோலி வடக்கு.
6. பத்மநாதன் அருட்பிரகாசம் - சவணாய், புலோலி வடக்கு.
7. பரஞ்சோதி சற்குணநாதன் -பழவத்தை, வியாபாரிமூலை.
8. வைத்திலிங்கம் தங்கவேல் -கொம்மாந்துறை, கெருடாவில் கிழக்கு
9. போ. ராஜேஸ்வரி - மந்திகை.
10. சபாரத்தினம் கணநாதன்-கோவிலதோட்டம், அலவாய் வடக்கு,

(தொடரும்)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## அன்னராணி அருணாசலம்

அன்னையின் மடியில் 1918-06-04 — ஆண்டவன் அடியில் 1993-04-05

மாதம் ஒன்று சென்றதம்மா ஆண்டு பல சென்றாலும் உன் பிரிவை என்றென்றும் மறவோம் அம்மா

அம்மாவின் ஈமக்கிரியைகளில் சமுகம் அளித்தவர்கட்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமதில்லத்தில் 05 05.1993 ல் நாளை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மயிலியதனை
தொண்டமானாறு
வல்வெட்டித்துறை (4812)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

---

## 2 ஆரம்பமாகிவிட்டன

[சனி, ஞாயிறு]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் | 10-11 |
| வர்த்தகம் | — திரு தேவா | 1-2 |
| கணக்கியல் | — திரு. S K. பிரபாகரன் | 12-1 |
| அளவையியல் | — திரு. விக்கி | 9-10 |
| தமிழ் | — திரு. குழந்தை | 4-5 |
| இந்து நாகரிகம்) இந்து சமயம்) | — திரு. காரை சுந்தரம்பிள்ளை | 1-2 10 11 |
| புவியியல் | — திரு. குணராஜா | 11-12 |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் | 9-10 |
| வரலாறு | — திரு. சிறீதரன் | 1-2 |

¥ 95ஆம் ஆண்டுக்கு இவ்வருடம் பிரிவு III மட்டுமே ஆரம்பமாகும்.

★ அனுமதிகளுக்கு முந்துங்கள்

(சி-6557)

---

## இந்துமதகுருமார் ஒன்றியம்
## முக்கிய அறிவித்தல்

10-5-93இல் இந்துமதகுருமார் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதால் இதுவரையில் அங்கத்துவம் பெறாமல் இருக்கும் சகல இந்துமத குருமார்களையும் அங்கத்துவர்களாக இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் சந்தாப்பணம் செலுத்தாதவர்களும் சந்தாப்பணம் செலுத்தி இந்துமத குருமார் ஒன்றியத்தின் அங்கத்துவ அட்டையை பெற்றுக் கொள்ளலாம். அங்கத்துவ அட்டை பெற்றுக் கொள்ளாதவர்கள் வருடாந்த பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையை இழந்தவர்களாக கருதப்படுவார்கள் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம். 22, பிறவுண் றோட் நீராவியடி, யாழ்ப்பாணத்தில் பி. ப. 1-00 மணி தொடக்கம் பி. ப. 5-00 மணிவரை காரியாலயம் திறந்து இருக்கும்.

நன்றி.

இப்படிக்கு
வை. கருணாகரேஸ்வரக் குருக்கள்
இந்துமத குருமார் ஒன்றியம். பொதுச்செயலாளர்

(சி-6556)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னைநாள் மாணவரும்
வடஇலங்கை சுதேச வைத்திய சபையின்
நிர்வாக சபை உறுப்பினருமாகிய வைத்தியக் கலாநிதி

**இ. பாக்கியநாதன் அவர்கள்**

காலமானதையிட்டு எமது கல்லூரி விரிவுரையாளர்களும்,
மாணவர்களும் ஆழ்ந்த கவலையும் வேதனையும்
அடைகின்றோம்

**அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்**

அவரது இழப்பு சித்த ஆயுர்வேத மருத்துவத்துறைக்கு
பேரிழப்பாகும் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்,
நண்பர்களுடன் நாமும் துயரத்தைப் பகிர்ந்து
கொள்கின்றோம்.

லங்கா சித்த ஆயுர் வேத
மருந்துவக் கல்லூரி.
விரிவுரையாளர்களும், மாணவர்களும்

(4813)

---

வெள்ளிக்கிழமை இணுவில்

### சித்திரபுத்திரனார் கதை

தெல்லிப்பழை அருள்மிகுஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று சித்திரபுத்திரனார் கதைபடிப்பு இடம்பெறும்.

விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளும் நடைபெறும். (24)

---

இருந்து கல்விப் பணிப்பாளர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். பி. ப. 5-30 மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் மணிவிழா நிகழ்வில் சமயப்பெரியார்கள், அறிஞர்கள், கல்விமான்களின் ஆசியுரைகளும், பாராட்டுரைகளும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (11)

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-04

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். டயான்** (சின்னத்துரை தேவலிங்கம் - ஆரையம்பதி - மட்டு.)

**காமினி** (காமினி பேபியன் அனஸ்டீன் - 63, புதுவீதி, கொய்யாத்தோட்டம் - யாழ்ப்பாணம்)

1988ஆம் ஆண்டு ஆலையடிவேம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் சயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். மைக்கல்** (யோசப்பிள்ளை தியாகராசா-அக்கரைப்பற்று - 03, அம்பாறை)

இதே சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். சுரேஸ்** (குழந்தைவேல் தவராசா - அக்கரைப்பற்று - 08. அம்பாறை)

திராய்க்கேணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். சரத்** [மார்க்கண்டு கண்ணதாசன்- ஆர். கே. எம். வீதி, காரைதீவு-01, அம்பாறை]

1990ஆம் ஆண்டு அம்பாறை - கல்முனை இறக்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**அலெக்ஸ்** (அகமட்றியாஸ் - முஸ்லிம் வித்தியாலய வீதி, மருதமுனை - நீலாவனை)

1991ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பகுதியை அண்டிய தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைக்கப்பல் மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய-

(கரும்புலி)
**கப்டன் ஜெயந்தன்** (சம்புக்குட்டி பத்மநாதன் - மாரியம்மன் கோயிலடி, சோதிபுரம் - மட்டு.)

(கரும்புலி)
**கப்டன் சிதம்பரம்** (பெரியதம்பி சந்திரன்- நடராசா வீதி, வல்வெட்டித்துறை- யாழ்.)

1992ஆம் ஆண்டு மட்டு - இருதயபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். பிரபாகரன்** (தம்பிப்பிள்ளை பிரபாகரன்- சத்துருக்கொண்டான் - மட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6555)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

வாழ்வில் ஒரே ஒரு தோல்விதான் உள்ளது. அது தானறிந்தவற்றில் சிறந்ததற்கு உண்மையாய் இராதது தான் அது.

- ஃப்ரெடரிக் வில்லியம் ஃபாரார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## பதவி வெற்றிடம்

ஒரு அரசியல்வாதியின் மரணம் அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்துகின்றதோ இல்லையோ அவர்வகித்த பதவியில் வெற்றிடம் ஏற்படுவதுதவிர்க்கமுடியாததாகின்றது. இந்தவரிசையில் சிறிலங்கா ஜனாதிபதியான பிரேமதாசா கொல்லப்பட்டமையானது சிறிலங்கா அரசியலில் ஏற்படுத்திய வெற்றிடத்தைப் பற்றிய விமர்சனத்தின் முன் அவர் வகித்த பதவி வெற்றிடம் உடன் நிரப்பப்பட வேண்டியது அவசியமாகியுள்ளது. இந்நிலையில் அவ்வெற்றிடத்தை திரு. டி. பி. விஜயதுங்காவைக் கொண்டு நிறைவு செய்ய தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சி ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

திரு. டி. பி. விஜயதுங்கா பிரேமதாசாவின் ஒரு கைப்பாவை போன்று செயற்பட்டவர். பிரேமதாசாவின் ஆட்சியில் பிரதமர், நிதி மந்திரி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகிய முக்கிய பதவிகளை வகித்தவர். இறுதிவரை வகித்தும் வந்தவர். ஆனால் இவர் தனது அமைச்சுக்களில் சாதனை எதுவும் புரிந்தாரா என்றால் இல்லை என்றே கூறலாம்.

திரு. பிரேமதாசாவின் ஆட்சியைப் பொதுவாகவே அதிகாரிகளின் ஆட்சி என்றே கூறுவதுண்டு. ஒவ்வொரு அமைச்சுக்கெனவும் திறமை வாய்ந்த அதிகாரிகளைத் தானே நேரடியாக நியமனம் செய்து நிர்வாகத்தை இயக்கி வந்தவர் பிரேமதாசா. இவரது அமைச்சரவைச் சகாக்கள் பொதுவாகவே பொம்மைகளாகவே இருந்தனர். அதிகாரிகளை மீறி அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. கையொப்பம் இடுவது மட்டுமே அவர்களது கடமையாக இருந்தது.

இந்த வரிசையில் டி. பி. விஜயதுங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு மிகவும் கீழ்ப்படிவுள்ள பரமார்த்த குருவின் சீடராகவே இருந்தார். அவரது கையில் மூன்று முக்கிய மந்திரிப் பதவிகள் கிட்டும் அளவிற்கு அவரின் பணிவு இருந்தது. இதே வேளை, தனது கைப்பாவைகளாகச் செயற்பட மறுத்தவர்களையும், தனது போக்குக் குறித்து விமர்சனம் செய்தவர்களையும் தனது அமைச்சரவையில் வைத்திருக்க பிரேமதாசா எப்பொழுதுமே

# கொழும்பு ஆஸ்பத்திரியில் கைதி சுட்டுக்கொலை

## வார்ட்டில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரியின் 32-ம் இலக்க வார்ட்டில் சிறை அதிகாரிகளின் பாதுகாப்புடன் அனுமதிக்கப்பட்டிருந்த விளக்க மறியல் கைதி ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

உபாலி கருணாரட்ன என்னும் இக் கைதி கடந்த திங்களன்றிரவு 7.15 மணியளவில் துப்பாக்கி சகிதம் வார்ட்டினுள் பிரவேசித்த இனந்தெரியாத மூவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இருவர் சிறை அதிகாரிகளைத் துப்பாக்கி முனையில் நிறுத்தி வைத்திருக்க மூன்றாமவர் விளக்க மறியல் கைதியைநோக்கி பல தடவை கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடியதாக கூறப்படுகிறது.

கொல்லப்பட்ட கைதி அண்மையில் அரசியல்வாதி ஒருவரின் வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைக்குண்டு வீசப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## எட்டு மாணவர்களுக்கு ஜப்பான் செல்ல வாய்ப்பு

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற எட்டு மாணவர்கள் ஜப்பான் செல்ல ஏற்பாடாகியுள்ளது. இவ்வாறு ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் ஜப்பான் செல்லஇருப்பது இது மூன்றாவது தடவையாகும். 1993 ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதியில் 11 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 12 வயதுக்கு குறைவானதாகவும் இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சையில் ஆள்மாறாட்டம் 752 பேருக்கு எதிராக புகார்

க. பொ. த. (சாதாரணம்) டிசம்பர் 1992ஆம் ஆண்டுப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்தமை மற்றும் ஒழுங்கீனமாகநடந்துகொண்டமைக்காக 752 பேருக்கு எதிராக பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் பரீட்சைத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆகக்கூடுதலாக இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 114 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணத்திலிருந்து குறைவாக ஒரு முறைப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆராயப்பட்டு அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால், அவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார். குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்படுவதோடு, ஐந்து வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டால் 500 ரூபா அபராதமும் விதிக்கப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### நெருப்புக் காய்ச்சல்

(கொழும்புத்துறை)

கொடூர வெயிலால் தற்போது யாழ் மாவட்டத்தில் நெருப்புக்காய்ச்சல் அதிவேகமாகப் பரவி வருகின்றது.

சிறுவர்களே பெரும்பாலும் இக்காய்ச்சலால் பீடிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட நேரங்களுக்கு நடுக்கத்துடன் விட்டு விட்டு வரும் இக்காய்ச்சல் பிள்ளைகளை வாட்டி வதைத்து விடுவதாகவும் குடியிருப்புப் பகுதிகளிலேயே இந்நோய் அதிவேகமாகப் பரவி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

### வெப்ப அதிகரிப்பால் நோய் பரவுகிறது

வடமராட்சி பகுதியில் வெப்ப நோய்க்கு சிலர் இலக்காகி வருகின்றனர். தற்போது ஏற்பட்டிருக்கும்வெப்ப அதிகரிப்பினால் மூளைக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கமாரி போன்ற நோய்கள் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவன் சுப்பிரமணியம் மகேசன்(வயது (2) வெப்பத்தினால் வயிற்றோட்டம் ஏற்பட்டு பலியா

## வவுனியாவில் 8 பேர் இராணுவத்தினரால் கைது

(கொழும்பு)

வடபகுதிக்குள் தடை செய்யப்பட்ட பொருள்களை கொண்டு செல்ல முயற்சித்ததாகக் கூறப்பட்டு எட்டுப் பேர் இராணுவத்தினரால் வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இராணுவ அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து தப்பிக்க முயன்றதாகவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

மாத்தளையில்

## பேருந்து பெயர்பலகைகளில் தமிழ்மொழி இல்லை

மாத்தளை நகரிலிருந்து தோட்டப்பகுதிகளுக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பஸ் வண்டிகளின் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி முற்றாக புறக்கணிக்கப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இ. போ. சபை தனியார் மயமாக்கப்பட்டதையடுத்து தமிழ்மொழி இவ்வாறு புறக்கணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அநுராதபுரம், கந்தளாய். பொலநறுவை, தம்புள்ள, கெக்கிராவ போன்ற சிங்கள பகுதிகளிலிருந்து மாத்தளை ஊடாக கண்டி நகருக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளில் ''ஜனதாசந்தக பிரவாகன சேவய'' என்ற பெயர்கூட தமிழில் எழுதப்பட்டிருப்பதாகவும்

## நற்பெயரை கொல்லாதீர்! பிரேமா இறுதி வேண்டுதல்

என்னைக் கொலை செய்தாலும் பரவாயில்லை. எனது நற்பெயரைக் கொலை செய்ய வேண்டாம் என்று ஜனாதிபதி பிரேமதாசா கேட்டுக் கொண்டார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் கொழும்பு கிருலப்பனையில் நடந்தபோது அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுவே அவரது கடைசிப் பொதுக்கூட்டமாக அமைந்து போய்விட்டது குறிப்பிடத்தக்கது.

## பிரேமாபோல் தலைவர் வேறு எவருமில்லை

- டி. பி. விஜயதுங்க

(கொழும்பு)

சிறிலங்காவின் அண்மைக் கால வரலாற்றில் பிரேமதாசாவைப் போல மக்களுக்குச் சேவையாற்றிய தலைவர் எவரும் இல்லை என்று பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் பிரதமர் டி. பி. விஜயதுங்க கூறியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு அவர் விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியில் மேலும், நாட்டில் ஜனநாயகத்தை மீண்டும்நிலை நிறுத்தவும், இலங்கையர்கள் மத்தியில் ஒருமைப்பாட்டையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த பாடுபட்டவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாடுஅதன் தவப்புதல்வர்களில் ஒருவரை இழந்து துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இச்சமயத்தில் நாட்டுமக்கள் அனைவரும் அமைதியோடு பொறுமையாக இருக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கு பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபரிடம் பதில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## ஆமர் வீதிச் சம்பவத்தில் 24பேர் பலி; 38 பேர் காயம்

உத்தியோகபூர்வ அறிவிப்பு

மே தினத்தன்று ஆமர் வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இருபத்திநான்கு என்றும். இவர்களில் ஏழுபேர் பொலிஸ் அதிகாரிகள் என்றும், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை முப்பத்தெட்டு ஆகும் என்றும் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்காவுடன் தகவல் ஒலிபரப்புத்துறை ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க ஜனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் வெளிவிவகார செயலாளர் பெர்னாட் திலகரத்தினா, தகவல் பணிப்பாளர் சுனந்த மத்துமபண்டார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## பிரேமா மறைவுக்கு தலைவர் பலரும் அனுதாபம்

[லண்டன்]!

நெருக்கடியான இந்த வேளையில், இலங்கை மக்களுக்கும், அரசுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகப் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேஜர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தக் கொலை தனக்கு மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டி, ஜனநாயகத்திற்கு விடுக்கப்படும் சவால்களை முறியடிப்பதும் அவசியம் ஆகும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலஞ் சென்ற ஜனாதிபதி பெரும் துயரத்தைத் தருவதாகும் என்றும் பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக் கான் கூறியுள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக வன்முறை பயன்படுத்தப்படுவதைத் தமது நாடு எப்போதும் எதிர்ப்பதாக அவுஸ்திரேலிய அதிபர் போல் கீற்றிங் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கொலை செய்யப்பட்ட செய்தி தன்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாக இத்தாலிய ஜனாதிபதி ஒஸ்கா கலீபாரோ கூறியுள்ளார்.

பிரேமதாசாவின் அகால மரணத்தால் தமது நாடு துக்

திரு. பிரேமதாசாவின் ஆட்சியைப் பொதுவாகவே அதிகாரிகளின் ஆட்சி என்றே கூறுவதுண்டு. ஒவ்வொரு அமைச்சுக்கெனவும் திறமை வாய்ந்த அதிகாரிகளைத் தானே நேரடியாக நியமனம் செய்து நிர்வாகத்தை இயக்கி வந்தவர் பிரேமதாசா. இவரது அமைச்சரவைச் சகாக்கள் பொதுவாகவே பொம்மைகளாகவே இருந்தனர். அதிகாரிகளை மீறி அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. கையொப்பம் இடுவது மட்டுமே அவர்களது கடமையாக இருந்தது.

இந்த வரிசையில் டி. பி. விஜயதுங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு மிகவும் கீழ்ப்படிவுள்ள பரமார்த்த குருவின் சீடராகவே இருந்தார். அவரது கையில் மூன்று முக்கிய மந்திரிப் பதவிகள் கிட்டும் அளவிற்கு அவரின் பணிவு இருந்தது. இதே வேளை, தனது கைப்பாவைகளாகச் செயற்பட மறுத்தவர்களையும், தனது போக்குக் குறித்து விமர்சனம் செய்தவர்களையும் தனது அமைச்சரவையில் வைத்திருக்க பிரேமதாசா எப்பொழுதுமே விரும்பவில்லை. இந்த முரண்பாடே லலித் - காமினி குழுவினர் ஐ. தே. கட்சியில் இருந்து வெளியேற/வெளியேற்ற வைத்தது.

இந்நிலையில் தனிப்பட்ட விசேட திறமைகள் எதுவுமற்றவரெனக் கணிக்கப்படும் டி. பி. விஜயதுங்காவை ஐ தே. கட்சி அடுத்த ஜனாதிபதியாக நியமிப்பதென்பது அக்கட்சிக்குள் தற்பொழுது சுமுகமான ஓர் அரசியற் சூழல் இல்லை என்பதையே காட்டுவதாகும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு கட்சிக்குள் பலர் போட்டியிடுவதையே காட்டுகின்றது. அதாவது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவப் போட்டியே டி. பி. விஜயதுங்காவிற்கு இப்பதவிக்குப் போட்டியிடும் வாய்ப்பைக் கொடுத்துள்ளது. அவரிடம் உள்ள திறமைக்காகவல்ல.

திரு. பிரேமதாசா தனக்குப் பின் என ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஓருவரை வளர்க்காது விட்டாலும், இன்று அடுத்தவர் யார் என்ற போட்டியில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரேக்கும், ஐ. தே. க. வின் பாராளுமன்றக்குழுத் தலைவரும், கைத்தொழில் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்ப அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்காவும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஐ. தே. கட்சி ஏகமனதாக டி.பி. விஜயதுங்காவைத் தெரிவு செய்துள்ளமையானது கட்சியில் ஏற்பட்டுள்ள தலைமைத்துவப் போட்டி கட்சியைப் பாதித்து விடக்கூடாது என்பதற்காகவே ஆகும். டி. பி. விஜயதுங்காவின் இந்நியமனமானது, இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இறந்த போது காங்கிரஸ் கட்சிக்குள் அர்ஜுன்சிங்கிற்கும், சரத்பவாருக்கும் இடையில் ஏற்பட்ட தலைமைப் போட்டியைத் தீர்க்க அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற திரு. நரசிம்மராவை இந்தியப் பிரதமராக நியமித்ததற்கு ஒப்பானதாகும்.

ஆனால் இப்போட்டி ஐ. தே. கட்சிக்குள் உடனடியாகத் தீர்க்கப்பட்டிருப்பதாக வெளிப்பார்வைக்குத் தெரியலாம். ஆனால், இது நீறு பூத்த நெருப்புப் போன்றது. 1994ஆம் ஆண்டு வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது இப்பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக உருவாகும் எனத் துணிந்து கூறலாம். ஆகையினால் அதிகாரப் போட்டியில் ஈடுபடுபவர்களுக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரைக்குமான சுமார் ஒன்றரை வருட காலப்பகுதி தங்களைத் தயார்ப்படுத்துவதற்கான இடைக்காலமாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

---

...புப் பகுதிகளிலேயே இந்நோய் அதிவேகமாகப் பரவி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

## வெப்ப அதிகரிப்பால் நோய் பரவுகிறது

வடமராட்சி பகுதியில் வெப்ப நோய்க்கு சிலர் இலக்காகி வருகின்றனர். தற்போது ஏற்பட்டிருக்கும்வெப்ப அதிகரிப்பினால் மூளைக்காய்ச்சல், வயிற்றோட்டம், செங்கமாரி போன்ற நோய்கள் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவன் சுப்பிரமணியம் மகேசன்(வயது (2) வெப்பத்தினால் வயிற்றோட்டம் ஏற்பட்டு பலியானார். (யோ) (24)

---

(கொழும்பு)

வடபகுதிக்குள் தடை செய்யப்பட்ட பொருள்களை கொண்டு செல்ல முயற்சித்ததாகக் கூறப்பட்டு எட்டுப் பேர் இராணுவத்தினரால் வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இராணுவ அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து தப்பிக்க முயன்றதாகவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

---

மாத்தளையில்

# பேருந்து பெயர்பலகைகளில் தமிழ்மொழி இல்லை

மாத்தளை நகரிலிருந்து தோட்டப்பகுதிகளுக்கான சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பஸ் வண்டிகளின் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி முற்றாக புறக்கணிக்கப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இ. போ. சபை தனியார்மயமாக்கப்பட்டதையடுத்து தமிழ்மொழி இவ்வாறு புறக்கணிப்பிற்குஉள்ளாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அநுராதபுரம், கந்தளாய், பொலநறுவை, தம்புள்ள, கெக்கிராவ போன்ற சிங்கள பகுதிகளிலிருந்து மாத்தளை ஊடாக கண்டி நகருக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளில் ''ஜனதாசந்தக பிரவாகன சேவய'' என்ற பெயர்கூட தமிழில் எழுதப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது,

---

## தேசிய துக்கதினம்

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பூட்டான், பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளில் மூன்று நாட்கள் தேசிய துக்கதினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வியாழக்கிழமையை தேசிய துக்கதினமாகப் பிரகடனம் செய்துள்ளது.

---

# பிரேமாவின் இறுதிச்சடங்கில் இந்திய உப ஜனாதிபதி

(டில்லி)

எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிச் சடங்கில் இந்தியாவின் சார்பாக துணை ஜனாதிபதி கே.ஆர் நாராயணனும் வெளியுறவு இணையமைச்சர் ஆர். எல்.பாட்டியாவும் கலந்து கொள்வர் என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவும், பிரதமர் நரசிம்மராவும்நேற்று புதுடில்லியில் உள்ளசிறிலங்கா தூதரகத்திற்குவிஜயம் செய்தனர். ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தை அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த அஞ்சலி குறிப்பேட்டில் தெரிவித்துக்கொண்டனர்.

---

பிரேமதாசா மரணச் சடங்கிற்கு

# இந்திய பிரதமர் வராமைக்கு பாதுகாப்பே காரணம்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணச் சடங்கின் போது இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கலந்து கொள்ளாமைக்கு பாதுகாப்பு பிரச்சினைகளே காரணம் என பி. பி. ஸி. தெரிவித்தது. பிரதமர் ராவிற்கு பாதுகாப்பு வழங்குவதில் சில பிரச்சினைகள் ஏற்படலாம் என இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர்.

---

# இந்திய நாடாளுமன்றத்தில் பிரேமாவுக்கு அஞ்சலி

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் அலுவல் எதுவும் மேற்கொள்ளப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் நேற்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கலுரை நிகழ்த்தினர். மாநிலங்கள் சபையிலும் இரங்கலுரை நிகழ்த்தப்பட்டது.

---

## முல்லை

முல்லை மாவட்ட தளபதி பாண்டியன், அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா. தமிழன்பன், மகளிர் அமைப்பு சார்பில் செல்வி மயூரி, கடற்புலிகள் பிரதேசப் பொறுப்பாளர் குணரட்ணம் மற்றும் கூளாமுறிப்பு அ. மி. த. க. பாடசாலை அதிபர் நித்தியகலா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

இக் கூட்டத்தின் முடிவில் சிறந்த ஊர்திகளுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் இடம் பெற்றது.

---

## பேகம் ஹாலிதா கலந்து கொள்வார்

பங்களாதேஷ் ஜனாதிபதி பேகம் ஹாலிதா ஷியா வியாழக் கிழமை நடைபெறவுள்ள இறுதிச் சடங்கில் கலந்து கொள்வார்.

---

# இறுதிக் கிரியைகளில் ஜே. ஆர். இரங்கலுரை

[கொழும்பு]

காலஞ் சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகளில் சர்வமத குருமாரும், சார்க் அமைப்பின் தலைவரும், பங்களாதேஷ் பிரதமருமான திருமதி பேகம் கலீதா ஸியா, முன்னாள ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா, பதில் ஜனாதிபதி டி. பி.விஜயதுங்க ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்த ஏற்பாடாகியுள்ளது

## இறுதிக்கிரியை

...டையும். வழி நெடுகிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலிசார் மேற்கொள்ளவுள்ளனர். இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளும் மக்களின் வசதிகருதி விசேட ரயில், மற்றும் பஸ் போக்கு வரத்துகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

## ஜனாதிபதி

வேட்பாளரையும் ஜனாதிபதி வேட்பாளராகநிறுத்தப்போவதில்லை என முடிவெடுக்கப்பட்டதாகவும் கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்களை ஆதாரம் காட்டி பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

அச்செய்தியில் மேலும், மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடாத்த வேண்டும் எனவும், ஊழல் வன்முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி தொடர்ந்து நீடிக்க அனுமதிக்க முடியாது எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்ததாக கூறப்பட்டது.

---

# பிரேமா மறைவுக்கு தலைவர் பலரும் அனுதாபம்

[லண்டன்]

நெருக்கடியான இந்த வேளையில், இலங்கை மக்களுக்கும், அரசுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகப் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேஜர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தக் கொலை தனக்கு மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டி, ஜனநாயகத்திற்கு விடுக்கப்படும் சவால்களை முறியடிப்பதும் அவசியம் ஆகும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலஞ் சென்ற ஜனாதிபதி பிரேமதாசா ஒரு தலைசிறந்த தேசத் தலைவர் என்றும் சீன மக்களின் சிறந்த நண்பன் என்றும் சீன ஜனாதிபதி கியாங் சி யென் கூறியுள்ளார். அத்துடன் சீன - இலங்கை உறவுக்கு அவர் ஆற்றிய சேவை மகத்தானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பு உறவுகள் வலுவடையவும், பிராந்திய ஒத்துழைப்பு விரிவடையவும், பிரேமதாசா அளப்பரிய பங்காற்றியுள்ளாரென்றும், இத்தகைய ஒருவரது இழப்பு பெரும் துயரத்தைத் தருவதாகும் என்றும் பாகிஸ்தான் அதிபர் குலாம் இஷாக் கான் கூறியுள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக வன்முறை பயன்படுத்தப்படுவதைத் தமது நாடு எப்போதும் எதிர்ப்பதாக அவுஸ்திரேலிய அதிபர் போல் கீற்றிங் ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கொலை செய்யப்பட்ட செய்தி தன்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாக இத்தாலிய ஜனாதிபதி ஒஸ்கா கலீபாரோ கூறியுள்ளார்.

பிரேமதாசாவின் அகால மரணத்தால் தமது நாடு துக்கத்தில் மூழ்கியிருப்பதாகத் துருக்கியப் பிரதமர் சுலைமான் ஜிம்தால் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள ஈரானியத் தூதுவரகம், இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்டோ, ஜப்பானியப் பிரதமர், ஜேர்மன் ஜனாதிபதி ஆகியோரும் அனுதாப செய்திகளை விடுத்துள்ளனர்.

---

## அச்சுறுத்தல்

நாட்டின் தலைவர் தலைநகரின் மத்திய பகுதியில் பட்டப்பகலில் வைத்து படுகொலை செய்யப்பட்டமை ஜனநாயகத்தின் அத்திவாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை காட்டுகின்றது. இவ்வாறு பிரேமதாசாவின் மறைவிற்கு அநுதாபம் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில் அநுரா பண்டாரநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

---

## ராஜதந்திரிகள் அஞ்சலி

சிறிலங்கா ஜனாதிபதியின் பூதவுடலுக்கு அஞ்சலிசெலுத்துவதற்கு வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு இன்று பிற்பகல் நான்கு மணிமுதல் ஐந்து மணி வரையும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவர்.

---

## இடைக்கால

...வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் நிலை வழமைக்குத் திரும்பியதும் உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். அதன் மூலம் மக்களின் விருப்பங்களை உணர்ந்து செயற்படவேண்டும் மக்கள் விருப்பத்திற்கு மாறாக எந்த ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கையிலும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஈடுபடாது என மேலும் அவர் தெரிவித்தார்.

எந்தக் கட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது என்ற பேச்சுக்கே இடமில்லைஎன அவர்தெரிவித்தார்

---

# விஜயதுங்கா

06-03-1989இல் ஜனாதிபதி ஆர் பிரேமதாசா அமைச்சரவையில் (9-வது பாராளுமன்றம்) பிரதம மந்திரியாகவும், நிதி அமைச்சராகவும் பதவியேற்றார்.

23-03-1990 இல் மதியம் 12 மணியளவில் அமைச்சரவை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து விஜயதுங்கா பதவி துறந்தார்.

30-03-1990 இல் மீளவும் பிரதம மந்திரியாக நியமனம் பெற்றார்.

ஈழநாதம்

## பிரேமாவின் கொலை அரசியல்நோக்கம் உடையது

ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை அரசியல் நோக்கங்களையும் கொண்டுள்ளது என இந்துப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இருள் சூழ்ந்த இலங்கை என்ற தலைப்பில் ஆசிரிய தலையங்கம் வெளியிட்ட இந்துப் பத்திரிகை, பல இன்னல்களை கண்ட இலங்கை அரசியலில் பிரேமதாசாவின் கொலைமிகவும் மோசமானது என்றும் குறிப்பிட்டுள்ளது,

## முல்லை மாவட்டத்தில் மேதின எழுச்சிப் பேரணி

(முல்லைத்தீவு)

சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரையான பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்ட மாபெரும் மேதினப் பேரணியும் பொதுக்கூட்டமும் முல்லை மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

தொழிலாளர் தினத்தில் ஒட்டிசுட்டான் கற்சிலைமடு சந்தியிலிருந்து மேதினப் பேரணி ஆரம்பமாகியது.

ஒட்டிசுட்டான் மகாவித்தியாலய மாணவர்கள் பான்ட் இசை முழங்க முல்லை மாவட்ட தளபதி திரு. பாண்டியன், பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் முல்லை மாவட்ட இணைப்பாளர் திரு.மறவன் மற்றும் போராளிகளும் பேரணியின் முன்னே செல்ல அவர்களைப் பின்தொடர்ந்து மக்கள் வெள்ளம் கொடிவிட்டுச் சென்றது.

சுமார் இரண்டு மைல் நீள பேரணியின் பின்னே கருத்தாழம் மிக்க பலவித உணர்வுகளையும் சித்தரிக்கும் படங்களைத் தாங்கிய முப்பதிற்கு மேற்பட்ட வாகன ஊர்திகள் அணிவகுத்து பாடசாலை மைதானத்தை சென்றடைந்தது.

அங்கு மாலை 5.45 மணியளவில் முல்லை மாவட்ட விசேட தளபதி திரு. அன்பு தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து மேதினக் கூட்டம் ஆரம்பமானது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த கட்ட பங்கீட்டு பொருள்கள் கொடுப்பனவின் போது அ.இ.உ. உலர் உணவு அட்டைக்கு 2 கிலோ சீனி கிலோ ஒன்று ரூபா 27.80 படி வழங்கப்படவுள்ளது.

மேற்படி வழங்கலுக்குரிய சீனியை பெறுவதற்கான வழங்கல் கட்டளைகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயலக புனர்வாழ்வுப்பகுதியில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. (சி)

## நாளை வரும்

குடாநாட்டுக்கான ஒரு தொகுதி மாவுடன் வாதுவ கப்பல் திருக்கோணமலையிலிருந்து புறப்பட்டு நாளை பருத்தித்துறையை வந்தடையுமென மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். இதே வேளை குமண கப்பல் குறிப்பிட்ட திகதிக்கு வராதெனவும் தெரியவருகின்றது. (சி)

# விமான மூலம் புலிகள் தாக்கலாம்; தமிழக முதலமைச்சர் அச்சம்

### விமான எதிர்ப்பு பீரங்கி கோருகிறார் ஜெயலலிதா

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, பாதுகாப்பிற்காக விமான எதிர்ப்புப் பீரங்கிகள் வழங்கப்படவேண்டும் என மாநில அரசு, மத்திய அரசிடம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளது. நேற்று அதிகாலை 3மணிக்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் வீடு அமைந்துள்ள இடத்திற்கு மேலாக கிளைடர் ரக மர்ம விமானம் ஒன்று இரண்டு மூன்று தடவை வட்டமிட்டதாகவும், இந்த விமானம் மெல்லிய இரைச்சலுடன் வெளிச்சம் ஏதுமின்றி சுற்றிச் சுற்றி வந்ததை முதலமைச்சரின் பாதுகாப்புப் படைகள் அவதானித்ததாகவும் தமிழக அரசு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வான் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளது ஜெயலலிதா வசிக்கும்பகுதியை விமானம் பறக்கக்கூடாத பகுதியாக அறிவித்து அதை இந்திய விமானப்படை அமுல் செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. எதிரி விமானத்தைச் சுட்டு வீழ்த்தக்கூடிய ஆயுதங்களை ஜெயலலிதாவின் வீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஜெயலலிதாவின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த பேச்சு நடத்துவதற்காக தமிழக உயர்பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இந்திய விமானப்படையின் தாம்பரம் தளத்தின் தளபதி ஆகியோரின் கூட்டத்தை மாநில அரசின் தலைமைச் செயலாளர் கூட்டியுள்ளார்.

விமானம் மூலம் எல்.ரீ.ரீ.ஈ யினர் முதலமைச்சரைத் தாக்கலாம் என்று ஏற்கனவே தமிழக பொலிஸ் புலனாய்வுத் துறையினர் எச்சரித்திருந்தமையும் இந்த அவசரப் பாதுகாப்பு நடவடிக்கைக்குக் காரணம் என தமிழக அரசு நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்டத்தில் மேதின எழுச்சி நிகழ்வு

(மன்னார்)

விடுதலைப்புலிகள்'மாணவர் அமைப்பின் பான்ட் வாத்தியம் இசை முழங்க மாபெரும் மேதினப் பேரணி மன்னாரில் நடைபெற்றது.

தொழிலாளர் தினமான கடந்த முதலாம் திகதி பண்டிவிரிச்சானிலிருந்து மடுவரை, தட்சனா மருதமடுவிலிருந்து மடு மைதானம்வரையான மூன்று மைல் தூர எழுச்சிப் பேரணியில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் கலந்து கொண்ட மக்கள் பெருமளவு சுலோகங்களை தாங்கி கோசங்களை எழுப்பியவாறு சென்றனர். இதன்போது தொழிலாளர் சங்கத்தினரால் மன்னார் உதவி அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அங்கிருந்து தொடர்ந்து சென்ற பேரணி அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகராலய அலுவலகம் சென்று அங்கும் ஒரு மகஜரைக் கையளித்த பின் அங்கிருந்து மடு மைதானத்தை வந்தடைந்தது.

அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. இதில் வர்த்தக சங்கத்தலைவர், மடு திறந்த நிவாரண நிலையத் தலைவர் மத்யூஸ், ஜோர்ச் குமார் மகளிர் அமைப்பு சார்பில் செல்வி இதயா மற்றும் மன்னார் மாவட்ட அரசியல்





சீமெந்து இல்லாமல்
கட்டிட வேலைகள்
செய்ய முடியாதா?
ஏன் முடியாது?



வெளிவந்துவிட்டது!




போராளிக் கவிஞன் தூயவன் அவர்களின்


## மரண அறிவித்தல்கள்

### திரு. வைத்திலிங்கம் குமாரசாமி (சின்னத்துரை)

வேலணை மேற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் குமாரசாமி (சின்னத்துரை) 22-04-93இல் நீர்கொழும்பில் காலமானார். இவர் வாலாம்பிகையின் அன்புக் கணவரும், உலகநாயகி, பாலசரஸ்வதி, சந்திரகுமார் (டென்மார்க்), பாக்கியலட்சுமி, மகேஸ்வரன், பதனிரேவதியின் அன்புத் தந்தையும் சுவாமிநாதன், மோகனதாஸ் (டென்மார்க்), வளர்மதி (டென்மார்க்), நாகரெட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் லோகேஸ்வரன், கார்த்தீபன் தாட்சாயினி, கஜாயினி, அபிநயன், சுகிர்தா, கஜரூபன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நீர்கொழும்பில் 23-04-93இல் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களிற்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி நாகரெட்ணம்
(மகள்)

(4814)

### வைத்திய கலாநிதி இரத்தினசபாபதி பாக்கியநாதன் ஜே. பி.

2-5-1993 காலை காலஞ்சென்ற வைத்தியகலாநிதி இ. பாக்கியநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (4-5-1993) செவ்வாய்க்கிழமை பி.ப. 3-30 மணிக்கு 90, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலைச் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா வைத்தியசாலை
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

இ. பொன்னையா
சகோதரர்
(4815)

### விசுவநாதர் சேதுகாவலர்





**சீமெந்து இல்லாமல் கட்டிட வேலைகள் செய்ய முடியாதா? ஏன் முடியாது?**

# சிமயம்

இந்தியாவில் பல்லாண்டு காலமாக பாவனையிலிருந்து இன்று இங்கு பட்டயம்பெற்ற பொறியியலாளரின் நேரடி மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட ஒட்டுக் கலவை ( MIX )

**சிமயம் 1300**

சகல சுவர் கட்டு வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் உபயோகிக்கலாம்.

**சிமயம் 1300 s**

தளம் பூச்சு வேலைகளுக்கும், தண்ணீர் படுபிடங்களில் பூச்சு வேலைகளுக்கும் உபயோகிக்கலாம்.
(தண்ணீர்த் தொட்டி, கிணறு, மலசலகூடம்)

**சிமயம் 1300 SX**

மாபிள் ஒட்டு வேலைகளுக்கும், திருத்த வேலைகளுக்கும் உபயோகிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

## ரூலின்ஸ் நிறுவனம்

**"விமலம்"**
**நல்லூர் குறுக்குத் தெரு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(சி-6524)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 04 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.






போராளிக் கவிஞன் தூயவன் அவர்களின்

**"இலக்குத் தெரிகிறது"**

கவிதைத் தொகுதீ வெளிவந்துள்ளது.

விடுதலைப் புலிகளின்
வெளியீட்டுப்பிரிவின் வெளியீடான
இந்நூல் ஒன்றின் விலை ரூபா 20/-

இக்கவிதைத் தொகுதியை சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-6560)


இப்பேரணியில் கலந்து கொண்ட மக்கள் பெருமளவு சுலோகங்களை தாங்கி கோசங்களை எழுப்பியவாறு சென்றனர். இதன்போது தொழிலாளர் சங்கத்தினரால் மன்னார் உதவி அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அங்கிருந்து தொடர்ந்து சென்ற பேரணி அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகராலய அலுவலகம் சென்று அங்கும் ஒரு மகஜரைக் கையளித்த பின் அங்கிருந்து மடு மைதானத்தை வந்தடைந்தது.

அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. இதில் வர்த்தக சங்கத்தலைவர், மடு திறந்த நிவாரண நிலையத் தலைவர் மத்யூஸ், ஜோர்ச்குமார் மகளிர் அமைப்பு சார்பில் செல்வி இதயா மற்றும் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கணேஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச்சங்கத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உ/தர) தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களிற்கான முன்னோடித் தேர்விற்கு உரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (பா)


தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

## உப பரிசோதகர்/காவலர் தரங்கள்

**கல்வித் தகைமைகள்:- 8-ம் வகுப்பு தொடக்கம் க.பொ.த [உயர்தரம்] வரை**

**உயரம்:- 5' 6"**

**வயது:- 18 தொடக்கம் 30 வரை**

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 15.05.93ந் திகதி வரை பழைய பூங்கா காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாக சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும் நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்வுக்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகமதரவும்.

**பா. நடேசன்**
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

[சி-6561]


(4814)

திருமதி நாகரெட்ணம்
(மகள்)

### வைத்திய கலாநிதி
### இரத்தினசபாபதி பாக்கியநாதன் ஜே. பி.

2-5-1993 காலை காலஞ்சென்ற வைத்தியகலாநிதி இ. பாக்கியநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (4-5-1993) செவ்வாய்க்கிழமை பி. ப. 3-30 மணிக்கு 90, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலைச் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா வைத்தியசாலை
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

இ. பொன்னையா
சகோதரர்
(4815)

## விசுவநாதர் சேதுகாவலர்

சரவணையூரைப் பிறப்பிடமாகவும் தற்போது சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய விசுவநாதர் சேதுகாவலர் (பிரசித்த நொத்தாரிசு, ஓய்வு பெற்ற ஆசிரியர்) 3-5-1993 நேற்று காலமானார். இவர் சரவணையூர் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோயில் பள்ளம்புலம் முருகமூர்த்தி கோயில் முன்னாள் தர்மகர்த்தாவும், சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலய முன்னாள் ஆசிரியரும் ஆவார்.

அன்னார் அமரர் விசுவநாதர் சின்னத்தங்கத்தின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற மங்களநாயகியின் அன்புக் கணவரும், கலாதேவியின் அன்புத் தந்தையும், அனலைதீவு, மு. சிவானந்தம் (ஆசிரியர், கனடா) அவர்களின் மாமனாரும், ரூபா, சுபாவின் பேரனுமாவார். இவர் காலஞ்சென்ற பிரசித்த நொத்தாரிசு வினாசித்தம்பி முத்தாச்சியின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சாவகச்சேரியில் இன்று 4-5-1993 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:

சிவசாந்தி
வைரவ முருகன்கோவிலடி,
கத்தாப்பாடி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

**வே. கெ. தனபாலன்**
(ஆசிரியர்)
யாழ். கொழும்புத்துறை
இந்து மகாவித்தியாலயம்
(4816)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 3-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9289

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3615, 27-7627, 40-4429, 26-5962, 24-0336, 26-0032, 42 5590, 26-3654, 24-9830, 24-4323, 27-9489, 24-1040, 42-9220, 42-6226.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

22-2250, 26-1376, 26-0502, 24-1685, 26-2786, 24-6646, 26-1609, 26-5491, 26-3962, 27-5535, 41-1092, 27-1122, 27-0994, 24-6431, 36 7534, 40-0630, 27-1741, 26-8052, 24-4481, 24-4957, 28-5039, 28-6996.